# இலங்கைத் தமிழரசுக் கட்சி

# ILANKAI THAMIL ARASU KADCHI

25 SEP 2020

## அமைப்புத் திட்டம்

## CONSTITUTION

இலங்கைத் தமிழரசுக் கட்சி
தலைமைச் செயலகம்,
30, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

Ilankai Thamil Arasu Kadchi
Head Office,
30, Martin Road,
Jaffna.

25 SEP 2020

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
# அமைப்பு விதிகள்

## விதி 1

(அ) பெயர் :

இந்த அமைப்பு "இலங்கைத் தமிழரசுக் கட்சி" என்று பெயர் பெறும். பின்வரும் விதிகளில் "இக் கட்சி என்று குறிப்பிடப்படும்.

(ஆ) சின்னம் : இக் கட்சியின் சின்னமாக "வீடு" சின்னம் இருக்கும்.

(இ) கொடி : தூய்மையான தியாகத்தின் மூலம் செழுமையான வாழ்வை அடையும் இலட்சியத்தைக் குறிக்கும் மஞ்சள்(தூய்மை) சிவப்பு (தியாகம்) பச்சை (செழுமை) நிறங்களைக் கொண்டு இங்கு காட்டப்பட்டுள்ள ஒழுங்கிலும், அமைப்பிலும் இக் கட்சியின் கொடி அமையப்பெறும்.

| |
|---|
| மஞ்சள் |
| சிவப்பு |
| பச்சை |

இலங்கைத் தமிழரசுக் கட்சி
30, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

## விதி 2

(அ) நோக்கம் :

ஐக்கிய இலங்கை இணைப்பாட்சியின் அங்கமாக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின்படி ஒரு சுயாட்சித் தமிழரசும், ஒரு சுயாட்சி முஸ்லீம் அரசும் நிறுவி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுடைய அரசியல், பொருளாதார, கலாசார விடுதலையைக் காண்பதே இக்கட்சியின் நோக்கமாகும்.

குறிப்பு :

தமிழர் தாயகத்தில் அமையும் தன்னாட்சி அரசில் வாழும் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கும் அவர்களுடைய மத, மொழி உரிமைகளுக்கும் பூரணமான உத்தரவாதம் அளிக்கப்படும்.

(ஆ) அடிப்படைக் கொள்கைகள் :

இக் கட்சி கீழ்காணும் கொள்கைகளுக்காக உழைக்கும் :

1. இலங்கையில் பிறந்த அல்லது இலங்கையைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண பிரஜாவுரிமை உண்டென நிலைநாட்டல்.
2. சமூக உயர்வு – தாழ்வுகளையும், அநீதிகளையும் குறிப்பாக ஒரு பகுதி மக்களிடையே நிலவும் தீண்டாமையையும் களைந்து இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி புத்தியிரளித்தல்.
3. இனம், சாதி, சமயம், ஆண், பெண் என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது கல்வி, தொழில் மற்றும் தேசிய நலன்கள் அனைத்திலும் சம சந்தர்ப்பம் அளிக்கும் சோசலிச பொருளாதார முறையினை ஏற்றப்படுத்தல்.

4. இணைப்பாட்சியின் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் கருதி சிங்கள மக்களோடு நல்லெண்ணமும், நட்புறவும் வளரச் செய்தல்.
5. இலங்கையில் சிங்கள இனத்தோ்டும் நாட்டோடும் சமாதான சக வாழ்வும் ஒத்துழைப்பும் என்ற அடிப்படையில் நட்புறவை நிலைநாட்டுதல்.

## விதி 3

உறுப்புரிமை :

(அ) 18 வயது நிரம்பப் பெற்று இவ்விதிகளில் கூறப்பட்ட கட்சியின் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் கட்சியின் உறுப்பினராவதற்கு அருகதையுடையவர்.

(ஆ) 1. கட்சி உறுப்புரிமைக்காக ஆண்டிற்கு ரூபா நூறு (100/-) செலுத்தி உறுப்புரிமை வாக்குறுதியையும் அளிப்பவர் சாதாரண உறுப்பினர் ஆவர்.

2. வாழ்நாள் முழுவதுக்குமான ரூபா ஆயிரம் (1000/-) வீதம் செலுத்துபவர் ஆயுட்கால உறுப்பினர் ஆவர்.

**உறுப்புரிமை வாக்குறுதி**

……….. ஆகிய நான் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அமைப்பு விதிகளில் கூறப்பட்டபடி கட்சியின் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்கிறேனென்றும் அவற்றை அடைவதற்கு இடையறாது உழைப்பேனென்றும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.

(இ) உறுப்புரிமை கோரும் விண்ணப்பம் உரிய படிவத்தில் நிரப்பி கையெழுத்திட்டு குறைந்தது ஓர் ஆண்டு சந்தாவுடன் விண்ணப்பதாரரின் பகுதியில் இயங்கும் கிளைச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் வாழும் பகுதியில் கிளை ஸ்தாபனம் இல்லாவிடின் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். மத்திய செயற்குழுவின் அங்கீகாரம் பெறாத விண்ணப்பதாரர் உறுப்பினராகார். மத்திய செயற்குழு காரணம் சொல்லாமல் எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்கலாம்.

(ஈ) கட்சியில் இயங்கும் உறுப்பினர் மட்டுமே பின்வரும் விதிகளுக்கு அமைய கட்சியின் எந்தப் பகுதிக்கோ, எக்காரிய அங்கத்துவத்துக்கோ, பொறுப்பு வகிப்பதற்கோ அருகதையுடையவர்.

1. நான்கு வருடங்களாவது இயங்கும் உறுப்பினராக இருந்தவரே கட்சியின் தலைவராகவோ, பொதுச் செயலாளராகவோ தெரிவு செய்யப்பட அருகதையுடையவர். குறைந்த பட்சம் இரண்டு வருடங்களாவது கட்சியின் இயங்கும் உறுப்பினராக இருந்தவரே எந்தப் பதவிக்கும் தெரிவு பெற அருகதையுடையவர்.
2. குறைந்தது இரண்டு வருடங்களாவது இயங்கும் உறுப்பினராக இருந்தவரே பொதுச் சபை உறுப்பினராகத் தெரிவுபெற அருகதையுடையவர்.

(உ) கட்சியின் அடிப்படைக் கொள்கைகளோடும், இலட்சியங்களோடும் முரண்படும் எந்த அமைப்போடு அல்லது இயக்கத்தோடாவது நேர்முகமாகவோ

மறைமுகமாகவோ உறுப்பினர் எவரும் தொடர்புறவும், சிரத்தை கொள்ளவும் கூடாது. சேர்ந்து பணியாற்றுதலும் ஆகாது.

### விதி 4

கட்சியின் தொகுப்பு

தமிழரசுக் கட்சியின் பின்வருவனவற்றால் தொகுப்புறும்

(அ) வருடாந்த மகாநாடு, இது "தேசிய மாநாடு" எனப் பின்னால் குறிக்கப்படும்.

(ஆ) விசேட தேசிய மாநாடுகள்

(இ) கட்சியின் பொதுச்சபை

(ஈ) கட்சியின் மத்திய செயற்குழு

(உ)வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தொகுதி வாரியாக அமைக்கப்பட்ட தொகுதிக் கிளைகளும், மாவட்டக் கிளைகளும், அம்மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மத்திய செயற்குழுவினால் அமைக்கப்பட்ட கிளைகளும்

(ஊ) கட்சியின் கிளைகள்

(எ) சாதாரண, இயங்கும் உறுப்பினர்

### விதி 5

கட்சியின் கிளைகள்

(அ) கட்சியின் கிளைகள் மத்திய செயற்குழுவினால் நிறுவப்படும். அவ்வப் பகுதியில் வசிப்போர் அவ்வக் கிளைகளில் சேர்க்கப்படுவர். நிறுவப்பட்ட கிளைப் பகுதிக்கு அப்பால் வசிப்போரை தலைமை அலுவலகம் வசதியான கிளையில் சேர்க்கும்.

(ஆ) ஒரு கிளையை ஆரம்பிக்க குறைந்தது ஐந்து இயங்கும் உறுப்பினராவது அப்பகுதியில் வசித்தல் வேண்டும்.

(இ) கிளைகளின் வட்டார எல்லைகளையும் பகுதிகளையும் நிர்ணயிக்கவும் மாற்றவும் மத்திய செயற்குழுவிற்கு உரிமை உண்டு.

(ஈ) ஒவ்வொரு கட்சிக் கிளையின் நிர்வாகமும் அதன் தலைவர், செயலாளர், பொருளாளர், என்பவர்களையும் 25 இற்கும் மேற்பட்ட உறுப்பினர் கொண்ட கிளையின் இவ்விதிக்கமைய தெரியப்பட்ட ஐந்திற்கும் மேற்படாத உறுப்பினர்களையும் கொண்ட செயற்குழுவினால் பரிபாலனம் செய்யப்படும்.

(உ)மத்திய செயற்குழுவினால் வகுக்கப்பட்ட கொள்கைகளையும் வேலைத்திட்டத்தையும் கொண்டொழுகுவது ஒவ்வொரு கிளையினதும் கடமையாகும்.

(ஊ) ஐப்பசி மாதத்தில் ஏழு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் செயலாளரோ, தலைவரோ கிளையின் வருடாந்த பொதுக்கூட்டத்தைக் கூட்டுவர். அக்கூட்டத்தில் பின்வரும் கருமங்கள் ஆற்றப்படும்.

1. கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் என்போரையும் 25 உறுப்பினருக்கு ஒருவராக ஐந்திற்கு மேற்படாத செயற்குழு உறுப்பினரையும் தெரிவு செய்தல்.

2. கட்சியின் தேசிய மாநாட்டுக்கு கிளையின் இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல். அக்கிளையின் உறுப்பினர் பட்டியலில் பத்து உறுப்பினருக்கு ஒருவராக இப்பிரதிநிதிகள் தெரியப்படுவர்.

3. கிளைப் பொருளாளரின் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்.

(எ) 1. மத்திய செயற்குழுவினால் அங்கீகாரம் பெற்ற கணக்குப் புத்தகத்தில் உறுப்பினர் சந்தா, அன்பளிப்பு ஆகியவற்றால் சேர்க்கப்பட்ட தொகைகள் பொருளாளரால் பதிவுசெய்யப்படும். ஒவ்வொரு மாதக் கணக்கும் விவரங்களுடன் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன் கட்சியின் இணைப்பொருளாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

2.ஒவ்வொரு கிளையிலும் சேர்க்கப்பட்ட சந்தா தொகையில் 40 வீதம் தனது செலவிற்கு வைத்துக் கொண்டு 10 வீதம் மாவட்ட கிளைக்கும் மிகுதியையும் அன்பளிப்புத் தொகையையும் இணைப் பொருளாளருக்கும் அனுப்புதல் வேண்டும்.

(ஏ) செயலாளர் கிளையின் முழு உறுப்பினர் பட்டியலை வைத்துக் கொள்ளல் வேண்டும். அதன் பிரதியொன்றை தலைமை அலுவலகத்துக்கு அனுப்புதல் வேண்டும். வருடாந்தக் கூட்ட முடிவில் புதிய உறுப்பினர் பட்டியலையும் உறுப்பினர் மாற்ற விவரங்களையும் அடுத்த 15 நாட்களுக்குள் தலைமை அலுவலகத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஐ) உறுப்பினர் முழுப்பட்டியலை வைத்திருத்தல், வரவு செலவுக் கணக்கு வைத்திருத்தல் ஆகியவற்றுக்கு மத்திய செயற்குழுவுக்கும் இணைப்பொருளாளருக்கும் கிளைத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் கூட்டுப் பொறுப்புடையவர்.

## விதி 6

### மாவட்டக் கிளைகள்

(அ) மத்திய செயற்குழு விதி 4(உ)வில் கூறப்பெற்றபடி மாவட்ட கிளைகளை நிறுவும், மாவட்ட கிளையின் எல்லைக்குள் நிறுவப்பட்ட எல்லாக்கிளைகளும் மாவட்ட கிளையின் உறுப்பினராம்.

(ஆ) மாவட்ட கிளை தன்னை ஆக்கும் கிளைகளின் அலுவல்களை இணைப்பதும் ஒருமுகப்படுத்துவதும் அதன் முக்கிய கடமையாகும். சிறப்பாக உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும் கட்சிப் பிரசாரத்திலும், நிதி திரட்டுவதிலும் இது பொருந்தும்.

(இ) கிளைகளின் அலுவலரும், செயற்குழு உறுப்பினரும் மாவட்ட கிளையின் உறுப்பினராவர்.

(ஈ) மாவட்டக் கிளை உறுப்பினர்கள் தமக்குள் ஒரு தலைவர், செயலாளர், பொருளாளர் என்போரைத் தெரிவு செய்வர். அவர்களே மத்திய செயற்குழுவின் ஆணையின் கீழ் மாவட்ட கிளையின் இயக்கத்திற்கு பொறுப்புடையவராவர்.

(உ) மாவட்ட பொருளாளர் ஒவ்வொரு மாதக் கணக்கையும் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குப் பிந்தாமல் இணைப் பொருளாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஊ) மாவட்டக் கிளை இரு மாதங்கட்கு ஒரு முறையாவது கூட வேண்டும். ஒரு மாவட்டக் கிளை கூட்டம் முறையானதாக ஏற்றுக் கொள்ளப்படுதற்கு உறுப்பினர் பட்டியலில் உள்ளோரில் குறைந்தது நான்கில் ஒரு பங்கினராவது சமூகமளிக்க வேண்டும்.

## விதி 7

பொதுச்சபை

(அ) கட்சியின் நோக்கத்திற்கும் அடிப்படைக் கொள்கைகளுக்கும் ஏற்பவும், தேசிய மகாநாடுகளின் தீர்மானங்களுக்கு அமையவும் கொள்கைகளையும் செயற்றிட்டங்களையும் வகுப்பதும், கட்சியின் பரிபாலனமும், கட்சியின் தலைவர் தெரிவும் பொதுசபையின் ஆணைக்குட்பட்டவை, என்பதுடன் பொதுச் சபை பின்வரும் நிர்வாகிகளையும் தெரிவு செய்யும்.

1. ஒரு சிரேஷ்ட துணைத் தலைவர்
2. ஐந்து துணைத் தலைவர்கள்
3. ஒரு பொதுச்செயலாளர்
4. ஒரு துணைப் பொதுச் செயலாளர்
5. ஆறு துணைச் செயலாளர்
6. இரண்டு இணைப் பொருளாளர்

(ஆ) மத்திய செயற்குழுவினரும் ஒவ்வொரு தொகுதிக் கிளையிலும் தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினரும் கட்சியின் பொதுச் சபை உறுப்பினராவர்.

(இ)தேசிய மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களை ஆக்க, விஷயாலோசனைச்சபையாக மாநாட்டிற்கு முன்னதாக, பொதுச்சபை கூடும்.

(ஈ) தக்க காரணத்திற்காக கட்சியின் எந்த அலுவலர் மீதும், மத்திய செயற்குழு உறுப்பினர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, பதவி நீக்கம் செய்யவும், வெளியேற்றவும் பொதுச் சபைக்கு அதிகாரம் உண்டு.

(உ) விஷயாலோசனைச் சபையாக கூடுவதைத் தவிர மத்திய செயற்குழுவின் தீர்மானத்தின்படி வேண்டுமானபோதும், வருடத்தில் மூன்று முறையேனும் கட்சியின் பொதுச்சபை கூடுதல் வேண்டும்.

அத்தகைய பொதுச் சபைக் கூட்டம் முறையானது என்று ஏற்றுக்கொள்ள குறைந்தது நாற்பது உறுப்பினரேனும் சமூகமளித்தல் வேண்டும்.

(ஊ) இரு மாவட்ட கிளைகள் தகுந்த காரணங்களோடு வேண்டுகோள் விடுத்த போதும், மத்திய செயற்குழு தேவை என்றும் உணர்ந்த போதும், பொதுக் காரிய சபை கூட்டப் பெறும். பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையாத எந்த வேண்டுகோளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1. பொதுச்சபையைக் கூட்ட வேண்டுகோள் விடுக்கும் ஒவ்வொரு மாவட்டத் தலைவரும் செயலாளரும் வேண்டுகோளில் கைச்சாத்திட்டிருத்தல் வேண்டும்.

2. பொதுச் சபையைக் கூட்ட வேண்டிய சிறப்புக் காரணத்தை எழுத்து மூலம் ஐயந்திரிபுக்கிடமின்றி கொடுத்தல் வேண்டும்.

3. பொதுச் சபையைக் கூட்ட எண்ணும் திகதிக்கு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னரே வேண்டுகோள் கொடுத்தல் வேண்டும்.

## விதி 8

### மத்திய செயற்குழு

(அ) 1. தலைவர்

2.பொதுச் சபையால் தெரிவு செய்யப்படும் ஏனைய நிர்வாகிகள்

3.தேசிய மாநாட்டின் பின் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மூவர் உட்பட பொதுச் சபையினால் தெரிவு செய்யப் பெற்ற பதின்மூன்று உறுப்பினர்கள்.

4.தலைவரால் நியமனம் பெறும் பதினொரு உறுப்பினர் உட்பட நாற்பத்தியொரு உறுப்பினரைக் கொண்ட மத்திய செயற்குழுவாகும்.

(ஆ) நடக்கும் வருடத்தில் தற்செயலாய் ஏற்படும் செயற்குழு உறுப்பினரின் வெற்றிடத்திற்கு பொதுச் சபையில் உள்ள ஒருவரை தலைவர் நியமிப்பார்.

(இ) கட்சியின் குறிக்கோளை தேசிய மாநாடு பணித்தவாறும் பொதுச் சபை தீர்மானித்தவாறும் செயலில் உருவாக்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவினுடையதே. அது தேசிய மாநாட்டிற்கே பொறுப்புக் கொடுக்கும் கடப்பபாடுடையது. அன்றியும் பொதுச் சபையிலும், தேசிய மாநாடுகளிலும் காலத்திற் காலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், உருவாக்கப்பட்ட திட்டங்களையும், கொள்கைகளையும் செயலில் நடாத்தும் அதிகாரம் மத்திய செயற்குழுவினதே. பொதுச்சபைக்கு உரிய பொது அதிகாரத்திற்கு பாதகம் இல்லாத வகையில் இக்குழு பின்வரும் அதிகாரங்களையும் உடையது:

1. கட்சியின் எல்லாக் கிளைகளையும், மாவட்டக் கிளைகளையும், ஏனைய மற்ற இயக்கங்களையும் கட்டுப்படுத்தலும் அவற்றின் மேல் ஆணை

செலுத்தலும், வழிகாட்டலும், அன்றியும் கட்சியின் எல்லா பொது அலுவல்களிலும் அவற்றிற்கு ஆலோசனை கூறலும் உதவி செய்தலும்.

2. நிதி திரட்டலும், அந்த நிதியை கட்சியின் தேவைக்கு ஏற்றவாறு உபயோகித்தலும்.

3. கடமையாற்றுவதில் ஒழுக்கக்கேடு, கீழ்ப்படிவின்மை, விசுவாசமின்மை ஆகியவற்றிற்காக கட்சியின் உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தலும் வெளியேற்றலும்.

4. தக்க காரணத்திற்காக மாவட்ட கிளையினதோ, கட்சிக் கிளையினதோ நிர்வாக சபையைக் கலைத்தும், அந்நிர்வாக சபையின் எந்த அங்கத்தவரையும் நீக்கியும் புதிய தேர்தல் நடத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும்.

5. மாவட்ட சபைகள், கிளைகள் ஆகியவற்றின் உள்ளும் அவற்றுக்கிடையிலும் எழும் சச்சரவு, முட்டுக்கட்டை ஆகியவற்றை நடு நின்று தீர்த்தலும்.

6. கட்சிக் கிளைகளுக்கும், மாவட்ட கிளைகளுக்கும் ஏற்ற உப விதிகளை அவற்றின் ஒழுங்கான நிர்வாகத்தின் பொருட்டு ஆக்குதலும்.

(ஈ) மேற்படி (இ)3ஆம், 4ஆம் உப பிரிவுகளில் கூறப்பட்ட அதிகாரப் பிரயோகத்தால் குறைவுடையோர் எவரேனும் தீர்மான நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் தீர்மானத்துக்கு எதிராகப் பொதுச் சபைக்கு ஆட்சேபனை முறையீடு செய்து கொள்ளலாம். அத்தகைய முறையீடுகள் அதன்பின் கூடும் பொதுச் சபையின் முதற் கூட்ட நிகழ்ச்சி நிரலில் கட்டாயம் குறிக்கப்பட வேண்டும். அத்தகைய முறையீடு குறித்துப் பொதுச் சபை தீர்ப்பளிக்கும் வரை மத்திய செயற்குழுவின் முடிவே செல்லுபடியாகும்.

(உ) அமைப்பு விதிகளுக்கோ அன்றி அவற்றிக் கீழ் ஆக்கப்படும் உப விதிகளுக்கோ கருத்து விளக்கம் கொடுப்பதில் மத்திய செயற்குழுவின் முடிவே இறுதியானது.

(ஊ) மத்திய செயற்குழுவின் கூட்டம் முறையானதாக குறைந்தது 11 உறுப்பினராவது சமூகமளிக்க வேண்டும். அடுத்து மூன்று மத்திய குழுக் கூட்டங்களுக்கு தகுந்த காரணமின்றிச் சமூகமளிக்காத உறுப்பினர் தம் பதவியை இழந்தவராகக் கருதப்படுவர். அங்ஙனமே பதவி இழந்ததாக பொதுச் செயலாளரால் அறிவிக்கப்படுவர்.

(எ) தேவை உண்டானபோது மத்திய செயற்குழு கட்சி உறுப்பினர்களிலிருந்து உப சபை, விசாரணை சபை முதலியவற்றை நியமிக்கலாம். இச்சபைகளுக்கு குறிப்பிட்ட அதிகாரங்களை அக்காரணங்களுக்காக வழங்கலாம்.

(ஏ) மத்திய செயற்குழுவானது அரசியல் குழு, நாடாளுமன்ற உறுப்பினர் குழு, மாகாணசபை உறுப்பினர் குழு, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் குழு, தேர்தல் வேட்பாளர் நியமனக் குழு, ஒழுக்காற்று நடவடிக்கைக் குழு என்பனவற்றை நியமனம் செய்வதுடன் அவற்றுக்கான வழிகாட்டு விதிகள் மற்றும் ஒழுக்காற்றுக் கோவை என்பனவற்றை வழங்குதலும் வேண்டும் அந்தந்த குழுக்களுக்கான உறுப்பினர் எண்ணிக்கையை மத்திய செயற்குழு தீர்மானிக்கும்.

## விதி 9

தலைவர்

(அ) கட்சியின் முதல்வர் தலைவரே. அவர் இவ்விதியின் படி தெரியப்படுவார்.

(ஆ) ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதம் 15 ஆம் திகதிக்கு முன் பொதுச் செயலாளர் கட்சியின் தலைவர் பதவிக்கு நியமனங்களைத் தாக்கல் செய்யும்படி கட்சி கிளைகளுக்கு அறிவிப்பார்.

(இ) அங்ஙனம் தலைவர் பதவிக்கு அனுப்பப்படும் நியமனப் பத்திரங்களில் கட்சியின் ஆறு இயங்கும் உறுப்பினர் கையொப்பமிட்டு பிரேரித்து அனுசரணையாக இருத்தல் வேண்டும். இந் நியமனப் பத்திரம், எழுத்து மூலம் அபேட்சகரின் சம்மதத்தோடு அவ்வாண்டு புரட்டாதி மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(ஈ) அவ்வாண்டு ஐப்பசி மாதம் 10 ஆம் திகதிக்கு முன் தலைவர் பதவிக்கு நியமனம் பெற்ற எல்லா அபேட்சகர்களின் பெயர்களையும் கட்சிக் கிளைகளுக்கு பொதுச் செயலாளர் அறிவித்தல் வேண்டும்.

(உ) அபேட்சகர் எவரும் அவ்வாண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதிக்கு முன் பொதுச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துத் தன் நியமனத்தை மீட்டுக் கொள்ளலாம்.

(ஊ) மீட்டுக்கொண்ட பெயர்களைவிட மிகுதியான அபேட்சகர்களின் பெயர்களை பொதுச் செயலாளர் ஐப்பசி மாதம் 30ஆம் திகதிக்கு முன் எல்லாப் பொதுக் காரிய சபை உறுப்பினருக்கும் கிளைகளுக்கும் அறிவித்தல் வேண்டும். எனினும் ஒரே ஒரு அபேட்சகரின் பெயர் மாத்திரம் மிஞ்சியிருந்தால் அவர் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதாக பொதுச் செயலாளர் வெளிப்படுத்த வேண்டும்.

(எ) போட்டி இருக்குமானால் கார்த்திகை 30ஆம் திகதிக்கு முன் மத்திய செயற்குழு தீர்மானிக்கும் இடத்தில் அல்லது இடங்களில் பொதுச் சபை உறுப்பினரை பொதுச் செயலாளர் கூட்டி இரகசிய வாக்கெடுப்பு மூலம் தலைவர் தெரிவு நடைபெறும். இதற்குரிய நிர்வாக ஒழுங்குகளை மத்திய செயற்குழு நிர்ணயிக்கும்.

(ஏ) தலைவர் பதவி வெற்றிடமானால் உப தலைவர் ஒருவரை எஞ்சிய காலத்துக்குத் தலைவராகப் பணியாற்றுமாறு மத்திய செயற்குழு நியமிக்கும்.

## விதி 10

(அ) வருடாந்த தேசிய மாநாடே கட்சியின் முழு அதிகாரங்களுக்கு நிலைகளனாகும். தேசிய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரையும் அதனோடு இணைக்கப்பட்டதாபனங்களையும் கட்டுப்படுத்தும்.

(ஆ) கட்சி உறுப்பினர்களும் வரவேற்புக் குழுவால் அழைக்கப்பட்டோரும் தேசிய மகாநாட்டிலே கலந்து கொள்ளலாம்.

(இ) இதில் பின்வரும் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

1. மத்திய செயற்குழுவின் உறுப்பினர்.
2. அனைத்துக் கிளைகளின் தலைவர், செயலாளர், பொருளாளர்

3. விதி 5 (ஊ) 2இன் படி கட்சிக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு பிரதிநிதிகள்

(ஈ) மத்திய செயற்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கும் அமைப்பு விதிகளுக்கும் இணங்க சமர்ப்பிக்கப்படாத எந்த விடயமும் விவாதத்துக்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(உ) மத்திய செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட திகதியிலும் இடத்திலும் தேசிய மகாநாடு நடத்தப்படும். பொதுச் செயலாளர் மகாநாடு ஆரம்பத்துக்கு 21 நாட்களுக்கு முன் புதினத்தாள் மூலமாகவும் அறிவித்தல் மூலமாகவும் தெரியப்படுத்துவார்.

(ஊ) தேசிய மாநாட்டை ஒழுங்கு செய்வதும் கூட்டுவதும் மத்திய செயற்குழுவின் பொறுப்பாகும். தேசிய மகாநாடு நடைபெறும் இடத்திலுள்ள மாவட்டக் கிளை ஒரு வரவேற்புக் குழுவை அமைக்கும். அது மத்திய செயற்குழுவிற்கு மகாநாட்டு ஒழுங்குகளைச் செய்வதற்கு உதவியளிக்கும்.

(எ) தேசிய மகாநாடு முறையெனக் கருதுவதற்கு குறைந்தது இருநூறு பிரதிநிதிகளாவது சமூகம் கொடுக்க வேண்டும்.

## விதி 11

சிறப்பு தேசிய மகாநாடு

(அ) நியாயங்களுக்காகவோ சிறப்புக் காரணங்களுக்காகவோ சிறப்பு தேசிய மாநாட்டை மத்திய செயற்குழு கூட்டலாம். இம்மகாநாடு கூடுவதற்கு இருவார முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எவ் விடயங்களுக்காக அது கூட்டப்படுகிறது என்பதை பத்திரிகை மூலமோ கட்சிக் கிளைகளுக்கு அறிவித்தல் மூலமோ வெளிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) முந்திய வருடம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சிறப்பு தேசிய மாநாட்டில் சமூகமளிக்கவும் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் அருகதையுடையவர்.

(இ) சிறப்பு தேசிய மகாநாடு கூடுமிடம், திகதி, நடவடிக்கைகள் ஆகியன பற்றிய மத்திய செயற்குழு தீர்மானிக்கும் பொறுப்புடையது.

(ஈ) பிரதிநிதிகளைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினரும் இம் மாநாட்டில் பிரசன்னமாயிருக்கலாம். ஆனால் தலைவரின் விசேட அனுமதியின்றி கலந்துரையாடவோ வாக்களிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார். இவ் விடயங்களில் தலைவர் தீர்ப்பே முடிவானது.

(உ) நாட்டில் நெருக்கடி நிலை, அசாதாரண சூழ்நிலைகளில் கட்சியின் நோக்கம், கொள்கைகள், தீர்மானங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமென மத்திய செயற்குழு, ஏழு உறுப்பினர்கள் கொண்ட உயர் மட்ட அரசியல்குழுவொன்றை நியமிக்க வேண்டும். மாற்று உறுப்பினர்களையும் நியமிக்கலாம். அரசியல் குழுவினர் செயற்பாடுகள் அடுத்துவரும் மத்திய செயற்குழுவில் ஒப்புக்கொடுத்தல் வேண்டும். மத்திய செயற்குழு பொருத்தமான தீர்மானங்களை நிறைவேற்றலாம்.

## விதி 12

கட்டணமும் நிதியும் :

(அ) வருடாந்த அங்கத்துவ கட்டணம் ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் 15ந் திகதிக்கு முன் கட்டப்பட வேண்டும்.

(ஆ) ஆறு மாதங்களுக்கு உறுப்புரிமை கட்டணம் செலுத்தாதோரும் செயற்குழுவினால் வேண்டப்பட்ட குறைந்த இரண்டு வருடங்களுக்கு மேல் சேவை செய்யாதோரும் எந்தக் கூட்டத்திலும், எந்தத் தேர்தலிலும் வாக்களிக்க அருகதையற்றவர்.

(இ) 18 மாதங்களுக்கு மேல் கட்சிக் கட்டணம் செலுத்தாதோரும், குறைந்தளவு சேவை செய்யாதோரும் மத்திய செயற்குழுவினால் அங்கத்தவர் பட்டியலிலிருந்து நீக்கப்படக் கூடியவர்.

(ஈ) மத்திய செயற் குழுவின் எழுத்து மூலமான விசேட அனுமதியின்றிக் கட்சியின் சார்பில் எந்த அங்கத்தவராவது கிளையாவது நிதியோ, அன்பளிப்போ திரட்டக் கூடாது.

## விதி 13

(அ) தலைவரும் உப தலைவரும்

1.வருடாந்த, விசேட மகாநாடுகளிலும், பொதுக் காரிய சபையிலும், மத்திய செயற்குழுவிலும் தலைவரே தலைமை வகிப்பார்.

2.பொதுச் செயலாளருக்கும், இணைப் பொருளாளருக்கும் கட்சியை நடத்தும் விடயத்தில் ஆலோசனை கூறுவதும் வழி நடத்துவதும் தலைவரின் கடமை.

3.தலைவர் சமூகமளிக்காத போது உப தலைவர்களில் ஒருவர் பரஸ்பர சம்மதத்துடன் அல்லது சபை தேர்ந்து எடுத்தபடி தலைமை வகிக்கலாம்.

4.உப தலைவர்களில் ஒருவரை ஏதாவது ஒரு அலுவலையோ, குறிப்பிட்ட ஒரு இடத்தின் ஸ்தாபனத்தையோ மேற்பார்வை செய்யவும், பொதுவாகத் தன் கடமைகளை மேற்கொள்ளவும் தலைவர் நியமிக்கலாம்.

5.தலைவரும், பொதுச் செயலாளரும் இரு இணைப் பொருளாளருடனும் சேர்ந்து கட்சியின் எல்லா நிதிகளுக்கும், சொத்துக்களுக்கும் பாதுகாவலர் ஆவர்.

(ஆ) பொதுச் செயலாளர்

1.பொதுச் செயலாளரே கட்சியின் பிரதான செயல் ஆற்றும் உத்தியோகத்தர் ஆவர். அன்றியும் பொதுச் சபை, மத்திய செயற்குழு, மாவட்ட சபைகள், கட்சிக் கிளைகளின் நிர்வாகச் சபைகள் ஆகியவற்றை ஒரு முகப்படுத்துபவரும் ஆவர்.

2.கட்சியின் மத்திய அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருப்பதும், ஏனைய கட்சி அலுவலகங்களை மேற்பார்வை செய்வதும், பொதுச் செயலாளரின் கடமையாகும்.

3.பொதுச் செயலாளர் எல்லா விடயங்களிலும் தலைவருக்கு உதவி செய்வார். தலைவரோடு ஆலோசித்துக் கட்சியின் கருமங்களை நடத்துவார்.

4.பொதுச் செயலாளர் ஒவ்வொரு மாதமும் கட்சியின் முன்னேற்றத்தைப் பற்றி அறிக்கையை மத்திய செயற்குழுவில் சமர்ப்பிப்பார். இணைக்கப்பட்ட தாபனங்களையும் இயக்கங்களையும் பற்றி கால் வருடத்திற்கு ஒரு முறை மத்திய செயற்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.பொதுச் செயலாளரே இணைக்கப்பட்ட தாபனங்களையும் கட்சியின் இயக்கங்களையும் மேற்பார்வை செய்து மத்திய செயற்குழுவிற்கு பொறுப்பாயிருப்பார்.

(இ) இணைப் பொருளாளர்கள்

1. கட்சியின் நன்கொடைகள், உறுப்புரிமை, கட்டணங்கள் மற்றும் வரவுகள் என்பவற்றால் சேரும் பணத்துக்கு தனியாகவும் கூட்டாகவும் இணைப் பொருளாளர்களே பொறுப்புடையவர்.
2. கட்சிக் கிளைகளினதும், மாவட்டக் கிளைகளினதும் ஒவ்வொரு மாத நிதி விபரங்களையும் அடுத்த மாதம் 15ந் திகதிக்கு முன் பெற்று அவற்றை அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இணைப் பொருளாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஒவ்வொரு கட்சிக் கிளையிலிருந்தும் உறுப்புரிமை சம்பந்தமாகப் பின்வருவனவற்றை இணைப் பொருளாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.
    (அ) உறுப்பினர் பட்டியல்
    (ஆ) புதிதாய்ப் பதிந்த உறுப்பினர் பட்டியல்
    (இ) கட்டணம் செலுத்தாத உறுப்பினர் பட்டியல்
    (ஈ) உறுப்புரிமையில் மாற்றம் பற்றிய விபரங்கள் இணைப் பொருளாளர்கள் வருடத்துக்கு ஒரு முறை கட்சிக் கிளைகளின் அங்கத்துவத்தைப் பற்றி மத்திய செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பர்.
4. பொதுச் செயலாளரின் அனுசரணையோடு எல்லாக் கட்சிக் கிளைகள், மாவட்ட கிளைகளின் உறுப்பினர் பட்டியலையும், கணக்கையும் வேண்டுமானால் பார்வையிடவோ, பரிசோதிக்கவோ, பரிசோதனை செய்விக்கவோ இணைப்பொருளாளர்களுக்கு அதிகாரமுண்டு.
5. 1. கட்சியின் நன்கொடைகள், அங்கத்துவக் கட்டணங்கள் மற்றும் வரவுகள் என்பவற்றால் சேரும் பணத்தை வைப்புச் செய்வதற்கென கட்சியின் செயற்குழு தீர்மானிக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்கலாம்.
    2. இவ்வாறு ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்குகளில் முதல் ஒப்பகாரராக இணைப்பொருளாளர்களில் ஒருவரும் இரண்டாம் ஒப்பகாரராக தலைவர் அல்லது பொதுச் செயலாளரும் ஒப்பமிடுவர்.
    3. சேயற்பாட்டுத் தேவை கருதி வங்கிக் கணக்குகளில் கையொப்பகாரர்களாக கட்சியின் நிர்வாகிகளில் எவருக்கும் செயற்குழு அதிகாரமளிக்கலாம்.

(ஈ) துணைப் பொதுச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர்

1. துணைப் பொதுச் செயலாளரும் ஆறு துணைச் செயலாளர்களும், பொதுச் செயலாளருக்கு உதவியாகவும் சேர்ந்தும் செயற்படுவர்.
2. துணைப் பொதுச் செயலாளர், பொதுச் செயலாளர் காலத்துக்குக் காலம் பணிக்கும் கடமைகளை நிறைவேற்றுவதுடன், பொதுச் செயலாளர், தமது கட்மைகளை நிறைற்ேற முடியாதவிடத்து அவரது கடமைகளை நிறைவேற்றுவார்.
3. துணைச் செயலாளர்கள் அவர்களது தெரிவுகளின் போது நிர்ணயிக்கப்படும் விடயப் பொறுப்புக்களை நிறைவேற்றுவர்.

(உ) உத்தியோகக் காலம்

1. கட்சியின் தலைவர் அடுத்துவரும் தேசிய மாநாட்டின் முதல் நாள் வரையும் தலைவராவர். விஷயாலோசனைச் சபை ஆரம்பத்தில் புதிய தலைவரிடம் தமது பொறுப்பைக் கையளிப்பார்.

2. பொதுச் செயலாளரும், மற்றக் கட்சி உத்தியோகத்தர்களும் தேசிய மாநாட்டின் இறுதியில் புது உத்தியோகத்தரிடம் பொறுப்பைக் கையளிப்பர்.
3. வெற்றிடமாகவும் பதவிகளை மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும்.

### விதி 14

இ.த.அ.கட்சியின் துனை தாபனங்கள் :

மத்திய செயற்குழு பின்வரும் தகுதிகளையுடைய வாலிபர் முன்னணி, மாதர் இயக்கம், தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள் ஆகியவற்றை கட்சியின் துணைத் தாபனங்களாக இணைக்கலாம்.

(அ) கட்சியின் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளல்.

(ஆ) மத்திய செயற்குழுவினால் விதிக்கப்படும் இணைப்புக் கட்டணங்களைச் செலுத்துதல்.

(இ) தங்கள் வருடாந்த வரவு செலவுக் கணக்குகளையும் அங்கத்தவர் பட்டியலையும் பார்வையிடவும் பரிசோதிக்கவும் கட்சியின் இணைப் பொருளாளருக்குச் சமர்ப்பித்தல்.

(ஈ) வருடாந்த வேலைத் திட்டத்திலும், கொள்கையிலும், எல்லா விடயத்திலும் கட்சியின் ஆலோசனை பெறுதல்.

### விதி 15

உடமைப் பாதுகாப்பு :

கட்சிக்கு அளிக்கப்பட்ட நன்கொடைப் பணம், சொத்து, நிதி ஆகியவற்றைப் பாதுகாக்க, தேவையானபோது நம்பிக்கையாளரை மத்திய செயற்குழு நியமிக்கும்.

### விதி 16

அமைப்பு விதித் திருத்தங்கள் :

(அ) வருடாந்த மகாநாட்டில் அல்லது விசேட மகாநாட்டில் முன்னறிவித்தலுடன் பிரேரணை வடிவமாகக் கொண்டுவரப்பட்டு, சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரால் நிறைவேற்றப்படாத எந்தத் திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

(ஆ) அமைப்பு விதித் திருத்தங்கள் விதி முதலாம் (அ) வின் படி வருடாந்த மகாநாட்டிலோ, சிறப்புத் தேசிய மகாநாட்டிலோ ஏற்பதற்கு மகாநாடு கூட்டப்படாத நிலையொன்றின் பொழுது மத்திய செயற்குழுவின் வழிகாட்டலில் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படலாம்.

(இ) விஷயாலோசனைச் சபையில் ஏற்றுக்கொள்ளப்படாத எந்த அமைப்பு விதித் திருத்தப் பிரேரணையும் தேசிய மகாநாட்டில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) இவ்விதிகளில் குறிக்கப்பட்ட திகதிகளில் நிறைறேற்றப்படாத காரணத்திற்காக மாத்திரம் எச் செயல்களும் செல்லுபடியற்றவையாக.

## விதி 17

புறநடை (பொது) :

(அ) இவ் விதிகளில் குறிக்கப்பட்ட திகதிகளில் எக்கருமமும் நிறைவேற்றப்பட முடியாது விட்டால் வேறு திகதிகளை நியமிக்க மத்திய செயற்குழுவிற்கு அதிகாரமுண்டு.

(ஆ) இவ் விதிகள் 1962 ம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி நடைமுறைக்கு வரும். ஆயினும் 1963ம் ஆண்டு ஆவணி மாதம் 31ந் திகதி வரை நடைமுறைக்கு கொண்டுவர முடியாத விதிகளை ஒட்டி இடைக்கால மாற்றங்களைச் செய்வதற்கு மத்திய செயற்குழுவிற்கு அதிகாரமுண்டு.

(இ) இலங்கைத் தமிழரசுக்கட்சியானது, “ஏனைய கட்சிகளோடு சேர்ந்து, தமிழர் கூட்டணியின் ஓர் அங்கமாக இயங்குவதை” இ.த.அ.கட்சியின் 12வது மகாநாடு அங்கீகரித்தது.

(ஈ) 1976 மே 14ம் திகதியிலிருந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்ணியினாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் அங்கீகரிப்பதென இ.த.அ.கட்சியின் பொதுக் குழு 24.04.2008ல் தீர்மானித்தது.

(உ) இவ்வமைப்பு விதிகளின் நடைமுறை பற்றிய தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவுக்கே உண்டு.

(ஊ) தேவையேற்படும் இடத்து அமைப்பு விதிகளில் இடைக்கால மாற்றங்களைச் செய்வதற்குப் பொதுச் சபைக்கு அதிகாரம் உண்டு.

(எ) இவ்வமைப்பு விதித்திருத்தங்களும் 2008 ஆகஸ்ட் 3ம் திகதி முதல் (03.08.2008) நடைமுறைக்கு வரும்.

முற்றும்

(இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10.01.2010 ஆம் திகதி நடைபெற்ற 13ஆவது தேசிய மகாநாடு அங்கீகரித்த அமைப்பு விதி திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது)

இலங்கைத் தமிழரசுக் கட்சி
30, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்